அரவிந்த் கேஜரிவாலுக்கு முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஆக.16: தில்லி முதல்வர் அரவிந்த் கேஜரிவாலுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்ததின வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட வாழ்த்துச் செய்தி: தில்லி வாழ் மக்களின் நலனுக்காக உழைத்து வரும் அந்த மாநில முதல்வர் அரவிந்த் கேஜரிவாலுக்கு பிறந்த நாள் நல்வாழ்த்துகள். எதிர் வரும் ஆண்டு அவருக்கு சிறப்பான ஆண்டாக அமையட்டும்.

இலங்கைக்கு ரூ.50 லட்சம் வரைவோலை

சென்னை, ஆக.16: இலங்கை நிவாரண நிதிக்கு ஏற்கெனவே அறிவித்தபடி எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஓ.பன்னீர்செல்வம் ரூ.50 லட்சம் வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக நிதித்துறை கூடுதல் செயலாளருக்கு ஓ.பன்னீர்செல்வம் எழுதிய கடிதம்:

இலங்கை மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் நிலையில், இலங்கைக்கு தமிழக அரசின் சார்பில் நிதியுதவி அளிக்கப்படும் என்று முதல்வர் சட்டப்பேரவையில் அறிவித்தார். அப்போது நானும் என் குடும்பத்தின் சார்பில் ரூ.50 லட்சம் வழங்கப்படும் என அறிவித்தேன். அதன்படி, எனது மகன்கள் ப.ரவீந்திரநாத், ப.ஜெயபிரதீப் ஆகியோரின் வங்கிக் கணக்கில் இருந்து தலா ரூ.25 லட்சத்துக்கான வரைவோலையாக மொத்தம் ரூ.50 லட்சம் அளிக்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு சட்டப் பல்கலை.யில் இடஒதுக்கீடு

மத்திய அமைச்சருக்கு அன்புமணி கடிதம்

சென்னை, ஆக.16: தேசிய சட்டப் பல்கலைக்கழகங்களில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் கிரன் ரிஜிஜுவுக்கு பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் செவ்வாய்க்கிழமை கடிதம் எழுதியுள்ளார்.

கடித விவரம்: இந்தியா முழுவதும் உள்ள 23 தேசிய சட்டப் பல்கலைக்கழகங்களின் மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் ஆகஸ்ட் 8 முதல் பெறப்பட்டு வருகிறது. ஆனால், பெரும்பான்மையான தேசிய சட்டப் பல்கலைக்கழகங்களில் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படுவதில்லை.

தேசிய சட்டப் பல்கலைக்கழகங்களைப் பொருத்தவரை ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் 50 சதவீதத்துக்கும் கூடுதலான இடங்கள் அகில இந்திய தொகுப்புக்கு ஒதுக்கப்படுகின்றன. அதிக எண்ணிக்கையிலான அந்த இடங்களில் ஓபிசி இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பதால், அந்தப் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். இந்த சமூக அநீதி போக்கப்பட வேண்டும்.

தேசிய சட்டப் பல்கலைக்கழகங்களில் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படுவதை மத்திய சட்ட அமைச்சகம் உறுதி செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

அதிமுக பொதுக் குழு வழக்கு: இன்று தீர்ப்பளிக்க வாய்ப்பு

சென்னை, ஆக. 16: அதிமுக பொதுக் குழுவை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அந்தக் கட்சி பொதுக் குழு உறுப்பினர் வைரமுத்து தொடுத்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தில் புதன்கிழமை (ஆக.17) தீர்ப்பு அளிக்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சென்னையில் கடந்த ஜூலை 11-இல் நடைபெற்ற அதிமுக பொதுக் குழுவுக்கு தடை கோரியும், அவைத் தலைவராக தமிழ்மகன் உசேன் நியமிக்கப்பட்டது செல்லாது என்று அறிவிக்கக் கோரியும் ஓ.பன்னீர்செல்வம், வைரமுத்து ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தனித்தனியாக வழக்கு தொடுத்தனர்.

இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி திட்டமிட்டபடி பொதுக் குழுவை நடத்தலாம் என்று தீர்ப்பளித்தார். இதை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு, இந்த வழக்கை மீண்டும் சென்னை உயர்நீதிமன்றமே, 2 வாரங்களில் விசாரித்து தீர்வு காண உத்தரவிட்டது.

இந்த வழக்குகள் நீதிபதி கிருஷ்ணன் ராமசாமியிடம் மீண்டும் பட்டியலிடப்பட்டிருந்தன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வழக்கு விசாரணையை வேறு நீதிபதிக்கு மாற்றக் கோரி ஓ.பன்னீர்செல்வம், வைரமுத்து ஆகியோர் சார்பில் உயர் நீதிமன்ற பதிவுத் துறையிடம் கடிதம் கொடுக்கப்பட்டதுடன், தலைமை நீதிபதி முனீஸ்வர் நாத் பண்டாரியிடமும் முறையிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து, இந்த வழக்கை வேறு நீதிபதிக்கு முன் விசாரணைக்குப் பட்டியலிட நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி தலைமை நீதிபதிக்கு பரிந்துரைத்தார். இதையடுத்து இந்த வழக்கை நீதிபதி ஜெயச்சந்திரன் விசாரிப்பார் என்று தலைமை நீதிபதி உத்தரவிட்டார்.

அதிமுக பொதுக் குழுவுக்கு எதிராக ஓ.பன்னீர்செல்வம், வைரமுத்து தாக்கல் செய்த மனுக்களை நீதிபதி ஜெயச்சந்திரன் கடந்த ஆகஸ்ட் 10, 11-ஆம் தேதிகளில் விசாரித்தார். அனைத்துத் தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி , இந்த வழக்குகள் மீதான தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தார். இந்த வழக்கு மீது புதன்கிழமை (ஆக.17) தீர்ப்பு அளிக்கப்படவுள்ளதாக, உயர்நீதிமன்ற பதிவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

தேசியக் கொடி அவமதிப்பு: தனியார் பள்ளி ஆசிரியர் கைது

திருப்பூர், ஆக.16: தாராபுரத்தில் தேசியக் கொடியை அவமதித்ததாக தனியார் பள்ளி ஆசிரியரைக் காவல் துறையினர் கைது செய்தனர்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் குறிஞ்சி நகரைச் சேர்ந்தவர் எபின் (36). இவர் தாராபுரத்தில் உள்ள தனியார் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவர் சுதந்திர தினத்தையொட்டி தனது வீட்டின் மொட்டை மாடியில் தேசியக் கொடியை ஏற்றியுள்ளார். இந்தக் கொடியில் மதம் குறித்த சர்ச்சைக்குரிய வகையிலான வாசகம் இடம் பெற்றிருந்தது.

இது குறித்து தாராபுரம் காவல் நிலையத்துக்கு அப்பகுதி பொது மக்கள் சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தகவலின்பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்த காவல் ஆய்வாளர் மணிகண்டன், எபினை காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினார்.

இதையடுத்து, தேசியக் கொடியை அவமதித்ததாக அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

புதிய சிலைகள், அரங்குகள் அமைக்க இடங்கள் தேர்வு

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் உத்தரவு

சென்னை கலைவாணர் அரங்கத்தில் மண்டல அளவில் நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் பணிகள் குறித்து செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்ட செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன். உடன் செய்தித்துறை செயலாளர் மகேசன் காசிராஜன், இயக்குநர் வீ.ப.ஜெயசீலன், துறை அலுவலர்கள்.

சென்னை, ஆக. 16: புதிய சிலைகள், அரங்குகள் அமைப்பதற்கான இடங்களை விரைந்து தேர்வு செய்ய வேண்டுமென அதிகாரிகளுக்கு செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் உத்தரவிட்டார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மண்டல அதிகாரிகள் அளவிலான ஆலோசனைக் கூட்டம் சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அமைச்சர் சாமிநாதன் பேசியதாவது:

மாவட்டங்களில் உள்ள நினைவகங்கள், அரங்கங்கள், மணிமண்டபங்கள், சிலைகள், நினைவுத் தூண்கள் ஆகியன அமைந்துள்ள இடங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்திட வேண்டும். அவர்கள் பார்வையில் படும்படி வைக்கப்பட வேண்டிய வழிகாட்டிப் பலகைகளில் நிலுவைகள் ஏதும் இருந்தால் அவற்றை விரைந்து அமைத்திட வேண்டும்.

திரையரங்குகளில் அரசின் திட்டங்கள், சாதனைகள், செயல்பாடுகள், விழிப்புணர்வுகள் குறித்த விடியோ செய்தி மலர்களை திரையிடச் செய்ய வேண்டும்.

அதனை மாவட்டங்களில் உள்ள செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்திட வேண்டும். விடுதலைப் போராட்ட வீரர்கள், விடுதலைப் போர் குறித்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'விடுதலைப் போரில் வீரத் தமிழகம்' என்ற முப்பரிமாண ஒலி-ஒளிக் காட்சி குறித்த தகவலை அனைவரிடமும் கொண்டு செல்ல வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் மானியக் கோரிக்கைகளில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக, சிலைகள் வைக்கவும், அரங்குகள் கட்டவும் இடங்கள் தேர்வு செய்வது தொடர்பாக விரைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றார் அமைச்சர். மு.பெ.சாமிநாதன்.

ஆலோசனைக் கூட்டத்தில், செய்தித் துறைச் செயலாளர் மகேசன் காசிராஜன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் வீ.ப.ஜெயசீலன், கூடுதல் இயக்குநர்கள் சிவ.சு.சரவணன், மு.பா. அன்புச்சோழன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

காவல் உதவி ஆய்வாளர்களுக்கு 15 நாள்களுக்கு ஒரு நாள் விடுமுறை

அரசாணை வெளியீடு

சென்னை, ஆக.16: தமிழக காவல் துறையில் உள்ள உதவி ஆய்வாளர்கள், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு 15 நாள்களுக்கு ஒரு நாள் விடுமுறை வழங்கும்படி தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

நாட்டின் ஐந்தாவது பெரிய காவல் துறையான, தமிழக காவல் துறையில் 1.20 லட்சம் போலீஸார் உள்பட 1.35லட்சம் பேர் பணிபுரிகின்றனர். மாநிலம் முழுவதும் 198 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உள்பட 1,500 காவல் நிலையங்கள் செயல்படுகின்றன.

இந்நிலையில், காவலர்கள் விடுமுறை இல்லாமல் 24 மணி நேரம் தொடர்ந்து பணியில் இருப்பதால் எளிதில் நோய் வாய்ப்படுவதாக புகார் எழுந்தது. மேலும், பணிச்சுமை காரணமாக மன அழுத்தத்திலும் சிக்கித் தவிப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதன் விளைவாக தமிழக காவல் துறையில் கடந்த 2020-ஆம் ஆண்டு 337 பேரும், 2021ஆம் ஆண்டு 414 பேரும் இறந்துள்ளனர்.

எனவே, காவல் நிலையங்களில் பணிபுரியும் காவலர்களுக்கு சுழற்சி முறையில் வார விடுமுறை வழங்க வேண்டும் என பல ஆண்டுகளாக கோரிக்கை எழுப்பப்பட்டு வந்தது. ஆனால் காவலர்களுக்கு வார விடுமுறை வழங்குவதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாகக் கூறி, வார விடுமுறை வழங்கப்படவில்லை.

உதவி ஆய்வாளர்களுக்கு விடுமுறை: இந்த நிலையில், 2021ஆம் ஆண்டு செப். 13-ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின், காவலர்களுக்கு வார விடுமுறை வழங்கப்படும் என அறிவித்தார். இந்த அறிவிப்பு அந்த ஆண்டு நவம்பர் மாதம் அமல்படுத்தப்பட்டது. இதையடுத்து காவல் உதவி ஆய்வாளர்கள், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்கும் வார விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

இந்த கோரிக்கையை ஏற்கும் வகையில், முதல்வர் மு.க.ஸ்டாலின், கடந்த மே மாதம் நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தின்போது, காவல் உதவி ஆய்வாளர்கள், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு 15 நாள்களுக்கு ஒரு முறை விடுமுறை வழங்கப்படும், இதன் மூலம் 10 ஆயிரத்து 508 பேர் பயனடைவர் என்று தெரிவித்தார்.

இந்த அறிவிப்பை அமல்படுத்தும் வகையில் தமிழக அரசின் உள்துறை அரசாணையை திங்கள்கிழமை வெளியிட்டது. இந்த அரசாணையின் விளைவாக, விரைவில் காவல் உதவி ஆய்வாளர்கள்,சிறப்பு உதவி ஆய்வாளர்களுக்கு 15 நாள்களுக்கு ஒரு நாள் விடுமுறை என்ற திட்டம் அமல்படுத்தப்படும் என காவல்துறையினர் தெரிவித்தனர்.

துணைவேந்தர்கள் கூட்டம் ஒத்திவைப்பு

சென்னை, ஆக. 16: சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் புதன்கிழமை (ஆக.17) நடைபெறவிருந்த பல்கலைக்கழக துணைவேந்தர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பல்கலைக்கழக துணைவேந்தர்களுடன் கலந்தாலோசனை நடத்துவதற்கான கூட்டம் ஆக.17-இல் நடைபெறும் உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி அறிவித்திருந்தார்.

இந்நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் குடியரசுத் தலைவர் , பிரதமர் ஆகியோரை சந்திப்பதற்காக செவ்வாய்க்கிழமை தில்லி புறப்பட்டுச்சென்றார். இதனால் புதன்கிழமை நடைபெறுவதாக இருந்த கூட்டம் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பொன்முடி தெரிவித்தார்.

சாத்தான்குளம் சம்பவம்: ரத்தக் கறை படிந்த துணிகளை குப்பைத் தொட்டியில் வீசிய போலீஸார்

கூடுதல் குற்றப்பத்திரிகையில் சிபிஐ தகவல்

மதுரை, ஆக.16: சாத்தான்குளம் வணிகர்கள் ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோரது ரத்தக் கறை படிந்த உடைகளை போலீஸார் குப்பைத் தொட்டியில் வீசியுள்ளதாக, சிபிஐ செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்துள்ள கூடுதல் குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாத்தான்குளம் வணிகர் ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோர் போலீஸ் விசாரணையின்போது தாக்கப்பட்டதில் உயிரிழந்தனர். இதுதொடர்பாக ஆய்வாளர் ஸ்ரீதர் உள்ளிட்ட 9 பேர் குற்றஞ்சாட்டப்பட்டனர். இந்த வழக்கு மதுரை முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. இந்த வழக்கில் சிபிஐ தரப்பில் ஏற்கெனவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட நிலையில், கூடுதலாக 400 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகை கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. அதில் இடம்பெற்றுள்ள முக்கியத் தகவல்கள்:

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள போலீஸார், 2020 ஜூன் 19ஆம் தேதி மாலை, சாத்தான்குளம் காமராஜர் பஜாரிலிருந்து ஜெயராஜையும், பென்னிக்ஸையும் அழைத்துச் சென்றுள்ளனர். அவர்களை சாத்தான்குளம் காவல் நிலையத்தில் கொடூரமாகச் சித்திரவதை செய்து, கடுமையான காயங்களை ஏற்படுத்தியுள்ளனர். பின்னர் அவர்கள் மீது பொய் வழக்குப் பதிந்துள்ளனர்.

இருவரது காயங்களிலிருந்து கசிந்த ரத்தம் காவல் நிலையச் சுவர்களிலும், தரையிலும் படிந்துள்ளது. அதை சுத்தப்படுத்துமாறு போலீஸார் பென்னிக்ஸை கட்டாயப்படுத்தியுள்ளனர்.

நீதித்துறை நடுவரிடம் ஆஜர்படுத்தியபோது, ரத்தக் கறை படிந்த துணிகளைக் கவனிக்கக் கூடும் என்ற அச்சத்தில், பென்னிக்ஸ், ஜெயராஜ் உடைகள் மருத்துவமனையில் மாற்றப்பட்டுள்ளன. ரத்தக் கறை படிந்த உடைகளை போலீஸார் குப்பைத் தொட்டியில் வீசியுள்ளனர். சாத்தான்குளம் காவல் நிலையச் சுவர்களிலிருந்த ரத்தம், இருவரையும் தாக்கிய லத்திகளில் இருந்த ரத்த கறை ஆகியவை தடயவியல் ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் ஆய்வாளர் ஸ்ரீதர், சார்பு- ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், காவலர்கள் முருகன், சாமதுரை, முத்துராஜா, செல்லத்துரை ஆகியோர் காவல் நிலையத்தில் தந்தை, மகன் இருவரையும் துன்புறுத்திய துவிசாரணையில் உறுதியாகத் தெரியவந்துள்ளது. மேலும் காவலர்கள் தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகியோர் பென்னிக்ஸ், ஜெயராஜை அநியாயமாக அடைத்து வைக்கும் நோக்கில் குற்றவியல் சதியில் ஈடுபட்டுள்ளனர் என சிபிஐ தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.எஃப்.எஸ். நிதி நிறுவன மோசடி வழக்கு: இருவர் கைது

சென்னை, ஆக.16: வேலூரைச் சேர்ந்த ஐ.எஃப்.எஸ். நிதி நிறுவன கோடி மோசடி வழக்கில், இருவர் கைது செய்யப்பட்டனர்.

இது குறித்த விவரம்: வேலூரை தலைமையிடமாக கொண்டு இயங்கி வந்த ஐ.எஃப்.எஸ்.(இன்டர்ஷேனல் பைனான்சியல் சர்வீஸ்) நிதி நிறுவனம் ரூ.1 லட்சம் முதலீடு செய்தால் மாதம் ரூ.8,000 வழங்கப்படும் என்று விளம்பரப் படுத்தியது. இதன் விளைவாக, கடந்த 5 ஆண்டுகளில் அந்த நிறுவனத்தில் சுமார் 88,000 பேர் ரூ.40 ஆயிரம் கோடி முதலீடு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் அந்த நிறுவனம் கூறியப்படி மாதந்தோறும் ரூ. 8 ஆயிரம் வாடிக்கையாளர்களுக்கு வழங்கவில்லை.

இதனால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்கள், அந்த நிறுவனத்தின் மீது தமிழக காவல்துறையின் பொருளாதார குற்றப்பிரிவில் புகார் செய்தனர். இப் புகார்களின் அடிப்படையில் அந்த நிறுவனத்தின் மீது கடந்த 5 -ஆம் தேதி மோசடி உள்ளிட்ட 9 பிரிவுகளின் சென்னை பொருளாதார குற்றப் பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இதையடுத்து அப் பிரிவு போலீஸார், கடந்த 6-ஆம் தேதி இந்த நிறுவனத்துக்கு சொந்தமான இடங்கள், அலுவலகங்கள், முகவர்கள் வீடுகளில் திடீர் சோதனை நடத்தினார்கள். இச் சோதனை சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், ராணிப்பேட்டை, ஈரோடு மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களில் 21 இடங்களில் நடைபெற்றது. சோதனையில் 220 முக்கிய ஆவணங்கள், ஹார்ட் டிஸ்க், 13 கணினிகள், 5 மடி கணினிகள், 14 கைப்பேசிகள், 40 பவுன் தங்க நகைகள், ஒரு கார், ரூ.1 கோடியே 5 ஆயிரம் பணம் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், அந் நிறுவனத்தின் இயக்குனர்கள், ஊழியர்களை பொருளாதார குற்றப்பிரிவு போலீஸார் தேடி வருகின்றனர். இந்நிலையில், ஐ.எஃப்.எஸ். நிறுவனத்தின் பிரதான முகவர்களாக இருந்த சென்னை ராஜா அண்ணாமலைபுரம் ஜவஹர் நகர் அருளப்பா தெருவைச் சேர்ந்த அ.குப்புராஜ் (40), ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலியைச் சேர்ந்த க.ஜெகநாதன் (34) ஆகிய இருவரை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

கரோனா பாதிப்பு சரிவு

சென்னை, ஆக.16: தமிழகத்தில் தினசரி கரோனா பாதிப்பு எண்ணிக்கைசெவ்வாய்க்கிழமை 670-ஆக குறைந்தது.

புதிதாக பாதிப்புக்குள்ளானவர்களில் அதிகபட்சமாக சென்னையில் 129 பேருக்கும், கோவையில் 88 பேருக்கும் தொற்று உறுதியானது. மாநிலம் முழுவதும் மருத்துவமனைகள், வீடுகளில் கரோனா சிகிச்சை பெற்று வருவோர் எண்ணிக்கை 6,888-ஆக உள்ளது. 927 பேர் தொற்றிலிருந்து விடுபட்டுள்ளனர்.

அனைத்து திருவிழாக்களுக்கும் காவல் துறையிடம் அனுமதி பெற வேண்டியதில்லை

உயர்நீதிமன்றம் உத்தரவு

மதுரை, ஆக.16: அமைதியாக நடைபெறக்கூடிய கோயில் திருவிழாக்களுக்கு காவல் துறையின் அனுமதி பெற வேண்டியதில்லை என, சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த சீனி தாக்கல் செய்த மனு: விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே வலையபட்டியில் உள்ள பட்டரசி அம்மன் கோயில் பொங்கல் திருவிழா பல ஆண்டுகளாக சுமுகமாக நடைபெற்று வருகிறது. நிகழாண்டு பொங்கல் திருவிழாவை ஆகஸ்ட் 19, 20இல் நடத்த முடிவு செய்யப்பட்டு, காவல் துறையிடம் அனுமதி கோரி மனு அளிக்கப்பட்டது. இதுவரை பதிலில்லை. எனவே, திருவிழா நடத்த அனுமதி வழங்க உத்தரவிட வேண்டும் என மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

மனுவை விசாரித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவு: கிராமங்களில் நடைபெறும் கோயில் திருவிழாக்கள் அனைத்துக்கும் காவல் துறையினரிடம் அனுமதி பெற வேண்டும் என்ற அவசியமில்லை.

திருவிழாக்களின்போது சட்டம்- ஒழுங்கு பிரச்னை ஏற்படும் வாய்ப்பு இருந்தாலோ, ஒலிபெருக்கிகள் வைப்பது, ஆடல்-பாடல் நிகழ்ச்சிகள் நடத்துவதாக இருந்தாலோ மட்டும் காவல் துறையின் அனுமதி பெற்றால் போதுமானது.

இம்மனுவைப் பொருத்தவரை கிராம மக்கள் அனைவரும் திருவிழா நடத்த ஒத்துழைக்கின்றனர். எனவே, சட்டம்- ஒழுங்கு பிரச்னை ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை எனக் கூறி, திருவிழா நடத்த அனுமதி வழங்கி நீதிபதி உத்தரவிட்டார்.

ICICI Home Finance
ICICI ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்
பெருநிறுவன அலுவலகம் ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்., ICICI HFC டவர், அந்தேரி குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு) மும்பை – 400 059 இந்தியா
கிளை அலுவலகம் : ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்., லயன் ஆர்கேட், 1A, 1 வது தளம், மதுரை சாலை, மேற்கு தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி - 627 001

(பார்க்க விதி 8 (6) க்கான விதி விலக்கு)
அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 உடன் படிக்க பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்ட / கடன் பொறுப்புக்கு உட்படுத்தப்பட்டு, ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட். ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்ட அசையாச்சொத்துக்கள் 'இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்' மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் இதன் கீழ்க்குறிப்பிட்ட சுருக்கமான விபரங்களின் படி விற்பனை செய்யப்படும்.

வ. எண்	கடன்தாரர்(கள்) / கூட்டுகடன்தார ர்கள் / ஜாமீன்தாரர்களின் பெயர் / கடன் கணக்கு எண்.	அடமானச்சொத்து விபரங்கள் (தெரிந்த வில்லங்கங்களுடன்) (ஏதேனும் இருப்பின்)	நிலுவை தொகை (ரூபாயில்)	அடிப்படை விலை / டேவணித்தொகை	சொத்து ஆய்வு தேதி – நேரம்	ஏல தேதி & நேரம்
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)
1	மொஹம்மத் மன்சூர் அலி (கடன்தாரர்) சனூஜா (கூட்டு கடன்தாரர்) / கடன் கணக்கு எண். NHNGL00000831989	கதவு எண். 74, மூல்கில்விளை, மண்கரை (அஞ்சல்) கிள்ளியூர், கன்னியாகுமரி 629 157	05 ஆகஸ்ட் 2022 ம் தேதியின் படி ரூ. 40,56,793/-	ரூ. 28,35,360/- ரூ. 2,83,536/-	14 – செப்டம்பர் 2022 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை	20 - செப்டம்பர் 2022 பிற்பகல் 02.00 மணி முதல் 03.00 மணி வரை
2	சுரேஷ் (கடன்தாரர்) பிந்து மூர்த்தி / ஸ்ரீ பகவதி மோட்டார்ஸ் (கூட்டு கடன்தாரர்) / கடன் கணக்கு எண். NHNGL00000834398	கதவு எண். 338/18, லட்சுமிபுரம் கிராமம், கல்லுகோட்டம், கன்னியாகுமரி - 629 201	05 - ஆகஸ்ட் - 2022 ம் தேதியின் படி ரூ. 60,11,655/-	ரூ. 55,44,375/- ரூ.5,54,438/-	14 – செப்டம்பர் 2022 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை	20 - செப்டம்பர் 2022 பிற்பகல் 02.00 மணி முதல் 03.00 மணி வரை

ஆன்லைன் ஏலமானது, ஏல முகமை க்ளோபல் டெக் - ன் வலைதளம் (URL Link https://BestAuctionDeal.com) ல் நடைபெறும். மொத்த நிலுவைத்தொகைகளை மேற்கொண்டு வரும் வட்டியுடன் சேர்த்து 2022 செப்டம்பர் 19 ம் தேதி மாலை 05.00 மணிக்கு முன்பு வரை செலுத்த அடமானதாரர் / இவ்வறிவிப்பு வழங்கப்பெற்றவர் ஆகியோருக்கு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது., தவறும் பட்சத்தில் இந்த ஜாமீன் சொத்துக்கள் பட்டியலிட்டவாறு விற்பனை செய்யப்படும். விலைகோர உத்தேசித்துள்ளோர் / வாங்குவோர், RTGS / கேட்பு வரைவோலையாக எடுக்கப்பட்ட மேற்சொன்ன டேவணித்தொகையுடன் (களம் "E" ல் குறிப்பிட்டவாறு) கூடிய விலைப்புள்ளிகளை ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்., லயன் ஆர்கேட், 1A, 1 வது தளம், மதுரை சாலை, மேற்கு தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி - 627 001 ல் 2022 செப்டம்பர் 19 ம் தேதியன்று மாலை 04.00 மணிக்கு முன்பே, சமர்ப்பிக்க வேண்டும்., விருப்பமுள்ள ஏலதாரர்(கள்) தங்களது விலைப்புள்ளிகளை வலைதளம் மூலம் சமர்ப்பிக்க இயல வில்லையெனில், தமது கையொப்பமிட்ட விலைப்புள்ளி ஆவணங்களை ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்., லயன் ஆர்கேட், 1A, 1 வது தளம், மதுரை சாலை, மேற்கு தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி - 627 001 என்ற முகவரிக்கு 2022 செப்டம்பர் 19 ம் தேதியன்று மாலை 05.00 மணிக்கு முன்பே கிடைக்குமாறு அனுப்பலாம் என்பதை தயவு கூர்ந்து அறியவும். டேவணித்தொகையானது. கேட்பு வரைவோலையாக (DD) ஏதேனும் தேசியமயாமாக்கப்பட்ட / பட்டியலிடப்பட்ட வங்கியில் "ICICI HOME FINANCE COMPANY LIMITED" என்ற பெயரில் திருச்சிராப்பள்ளியில் செலுத்தக்கவாறு எடுக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும், சொத்து ஆய்வு, ஏலம் அல்லது விலைப்புள்ளி சமர்ப்பிப்பு தொடர்பாக ஏதேனும் விபரங்கள் தேவைப்படுமாயின், ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட் ன் அலைபேசி எண்கள் - 70210 72869 அல்லது NexXen Solutions Private Limited யை தொடர்பு கொள்ளலாம். அதிகாரப்பூர்வ அலுவலர், எந்த காரணமும் குறிப்பிடாமல் எந்த ஒரு அல்லது அனைத்து ஏலம் / விலைப்புள்ளியை தள்ளுபடி செய்யவோ, ஏற்றுக்கொள்ளவோ உண்டான உரிமையை தன்னகத்தே வைத்துள்ளார். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வலைதளம் https://www.icicihfc.com/ யை தயவு கூர்ந்து பார்வையிடவும்.

தேதி : 2022 ஆகஸ்ட் 17
இடம் : கன்னியாகுமரி
அதிகாரப்பூர்வ அலுவலர்
ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்